1990 மார்ச் 20]

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே இந்த ஒத்திவைப்புத் திர்மானத்திற்கான முதலமைச்சர் அவர்களுடைய விளக்கம், திட்டமிட்டு எங்களைக் களங்கப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையிலும், நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்கிற அக்கறை இல்லாத நிலையை, நீங்கள் சுட்டிக் காட்டுவதாலும், அதற்கு சபாநாயகராகிய நீங்கள் துணை போகிற காரணத்தாலும், நாங்கள் கண்டித்து, வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

5. முன்பண மானியக் கோரிக்கைகள், 1990-91 செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990–91 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 17–3–90 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில், 2-ம் பக்கத்தில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள், ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகையை 1990-91 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்கான மொத்தமாக ரூபாய் 1,266 கோடியே 52 லட்சத்து 30 ஆயிரத்திற்கு மேற்படாத தொகை அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

நிறைவேற்றப்பெற்ற 1990-91 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

ஏ. வருவாய்க் கணக்கில் செலவு

1990-91 ஆம் ஆண்டு உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்.

கோரிக்கை.		(ரூபாய் ஆயிரத்தில்)
1.	நில வரித் துறை—	7,42,19
2.	மாநில ஆயத் தீர்வைத் துறை—	1,58,71
3.	மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிருவாகம்—	1,28,99

TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை.		(ரூபாய் ஆயிரத்தில்)
4,	பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும்—தீர்வைகளும்—நிருவாகம்—	7,39,68
5.	முத்திரைத் தாள்கள்—நிருவாகம்—	42,81
6.	பத்திரப் பதிவு—	3,33,59
7.	மாநிலச் சட்டமன்றம்—	55,92
8.	தேர்தல்கள்—	38,32
9.	மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்—	14,90,45
10.	பால் வழங்கு திட்டங்கள்	86,52
11.	மாவட்ட நிருவாகம்—	21,82,08
12.	தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்—	1,63,94
13.	நீதி நிர்வாகம்—	6,92,03
14.	சிறைச்சாலைகள்—	4,07,04
15.	காவல் துறை—	53,64,24
16.	தீயணைப்புப் பணிகள்—	4,16,68
17.	கல்வி—	2,60,50,66
18.	மருத்துவம்—	54,95,10
19.	பொதுச் சுகாதாரம்—	30,82,06
20.	வேளாண்மை—	1,08,86,79
21.	மீனளம்—	2,51,11
22.	கால்நடை வளர்ப்பு—	11,74,58
23.	கூட்டுறவு—	7,97,14
24.	தொழில்கள்—	1,63,25
25.	சின்கோனா—	84,90
26.	கைத்தறியும் துணித் தொழிலும்—	10,97,11
27.	கதர்த் தொழில்—	1,77,24
28.	சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும்—	56,21,73
29.	தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்—	8,52,27
30.	சமூக நலன்—	34,85,65
31.	பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்—	20,91,09
32.	பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன்—	7,11,7

கோரிக்கை.		(ரூபாய் ஆயிரத்தில்)
33.	வீட்டு வசதி—	3,52,73
34.	நகர்ப் பகுதி வளர்ச்சி—	28,39,58
35.	நுகர் பொருள் வழங்கல்—	94,83,37
36.	பாசனம்—	26,10,26
37.	பொதுப் பணிகள்—கட்டிடங்கள்—	91,39
38.	பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும்—	9,57,37
39.	சாலைகளும் பாலங்களும்—	35,07,71
40.	சாலைப் போக்குவரத்துப் பணிகளும், கப்பல் போக்குவரத்தும்—	2,16,74
41.	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு—	30,00
42	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும்—	66,72,64
43.	பல்வகை—	32,40,67
44.	எழுதுபொருள்—அச்சுத்துறை—	5,69,44
45.	காட்டுவளத் துறை—	6,68,34
46.	இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்—	10,63,25
47.	செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்—	1,20,13
48.	ஊரகத் தொழில்கள்—	6,18,58
49.	குடிநீர் வழங்கல்—	34,50,71
	மொத்தம்—A. வருவாய்க் கணக்கு	11,15,28,48

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு.

50.	வேளாண்மைக் குறித்த மூலதனச் செலவு—	73,90
51.	தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு—	5,55,97
52.	பாசனம் குறித்த மூலதனச் செலவு—	14,39,27
53.	பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு—	9,86,95
54.	சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு—	8,27,91

கோரிக்கை.	(ரூபாய் ஆயிரத்தில்
55. சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு—	12,38
56. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு—	6,57,47
57. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு—	17,66
58. பல்வகை மூலதனச் செலவு—	5,05,08
மொத்தம்—B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு	50,76,59
C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிச் செலுத்துதலும்.	
59. மாநில அரசு வழங்கும்கடன்களும் முன்பணங்களும்—	1,00,47,23
பெரு மொத்தம் ..	12,66,52,30

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) நிதி ஒதுக்க (முன்னணி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவு 1990 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (முன்னனி மானிய வாக்களிப்பு) சட்டமுன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும், ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல்

நிதி ஒதுக்க முன்னணி மானிய வாக்களிப்பு சட்டமுன் வடிவு. 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னனி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''